[27th July 1964

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்பொழுது நாம் எடுத்திருக்கும் பல முடிவுகளை ஒட்டி எல்லோரும் கட்டுப்பாடாக, பர்மிட் இல்லாமல் செமெண்ட் வாங்குவதில்லை என்று இருந்தால், கணிசமான அளவுக்குக் குற்றங்கள் குறையும் என்று நம்புகிறேன்.

புதிய ரயில் பாதை

***666 கேள்வி.—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திண்டுக்கல் முதல் போடி வரையில் வத்தலகுண்டு வழியாக ரயில் பாதை அமைக்கும் விஷயமாக மத்திய அரசாங்கத்திற்கு மாநில அரசு சிபாரிசு செய்துள்ளதா ?

THE HON. SRI V. RAMAIAH : No.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பல ஆண்டுகளுக்கு முன்பே இந்தத் திட்டம் சர்வே செய்யப்பட்டது என்று சொல்லப்பட்டது. அப்படியானால் சர்வே செய்யப்பட்டது என்பதாவது உண்மையா இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : 1946-ம் வருஷம் இது சம்பந்தமாக ஒரு யோசனை இருந்தது, அது பரிசீலனை செய்யப்பட்டது ; அதன் பிறகு அந்த யோசனை ஏற்றுக்கொள்ளாமல் . . .

கனம் சபாநாயகர் : . . . கைவிடப்பட்டது.

கனம் திரு. வெ. ராமைய்யா : . . . கைவிடப் பட்டது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : 46-ல் யோசனை இருந்து பின்னால் கைவிடப் பட்டது என்று அமைச்சர் சொன்னார்கள். காரணம் என்ன, அது எகனாமிக்காக இல்லையா, அல்லது ரயில் ரூட் தேவையில்லை என்று தள்ளிவிட்டார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த லைனை விட மற்ற லைன்கள் அவசியமாக இருந்ததால், அதற்கு ஹை-ப்ரையாரிட்டியோ அல்லது ப்ரையாரிட்டியோ கூடக் கொடுக்காமல் விட்டு விட்டார்கள்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சுதந்திரம் வருவதற்கு முன்பு பரிசீலனை செய்யப்பட்ட அந்தத் திட்டம், சுதந்திரம் வந்த பிறகு கைவிடப் பட்டதற்குக் காரணம் என்ன என்று அறியலாமா ?

கனம் திரு. வெ. ராமையா : அதற்குப் பிறகு அபிவிருத்தி அடைந்து விட்டோம் ; அதைவிட முக்கியமான இணைப்புக்கள் அவசியமாக இருந்தன. ஏதோ பரிசீலனை செய்து விட்டோமே என்பதற்காக இல்லாமல், முறையாக எதையும் செய்ய முன்வந்திருக்கிறோம். ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் ஏற்பட்டு வரும் அபிவிருத்திகளைப் பார்த்தால், மிக்க நல்ல முறையிலேயே வளர்ச்சி அடைகிறது என்பதைக் காணலாம்.

27th July 1964]

திரு. மா. இராசாங்கம்: திண்டுக்கல்-கூடலூர் இரயில் பாதை தானே பூர்வாங்கமாகப் பேசப்பட்டு வந்தது? அதில் ஏதாவது மாறுதல் இருக்கிறதா? 9-00 a.m.

MR. SPEAKER: Is it the same line?

திரு. மா. இராசாங்கம்: அந்தப் பாதை பரிசீலனையில் இருப்பதாகப் பேசப்பட்டதே. அது நடைமுறைக்கு வர வாய்ப்பு இல்லாமல் போனதற்குக் காரணம் என்ன? இனிமேலாவது இந்த சர்க்கார் மத்திய சர்க்காருக்கு இதுபற்றிச் சிபார்சு செய்யுமா?

MR. SPEAKER: Is it the same line or a different line?

SRI M. RAJANGAM: Extenion, Sir.

கனம் திரு. வெ. ராமையா: இதற்கு நான் சற்று முன்பு தான் பதில் சொன்னேன். பரிசீலனை செய்த அந்த நேரத்திலே, அங்கே இருக்கக்கூடியவர்களின் முயற்சி காரணமாகப் பரிசீலனை செய்தார்கள். ஆனல், நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில், இப்பொழுது ஏற்பட்டிருக்கும் தொழில் வளர்ச்சிக்குத் தகுந்த முறையில், ஆங்காங்குள்ள தேவைக்குத் தகுந்த முறையில் மற்ற அவசியமான இரயில்வே லைன்கள் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு, அதற்குத் தகுந்தாற்போல் ப்ரையாரிடி கொடுத்திருக்கிறோம்.

திரு. மா. இராசாங்கம்: மத்திய அமைச்சரவையில் எங்கள் பக்கத்து எம்.பி. கேட்டதற்கு, "அது பற்றிப் பரிசீலனையில் இருக்கிறது" என்று சொல்லப்பட்டது. அது பற்றி ஏதாவது தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா?

கனம் சபாநாயகர்: எது பற்றிய தகவல்? யாரிடமிருந்து தகவல்?

திரு. மா. இராசாங்கம்: டெல்லியிலிருந்து, மத்திய அமைச்சரிடமிருந்து.

கனம் திரு. வெ. ராமையா: என்னிடத்தில் ஒன்றும் தகவல் இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி: அந்த இரயில்வே லைன் கைவிடப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தேசீய நெருக்கடி நிலை முடிந்த பிறகு, இதைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்யும்படி மத்திய சர்க்காருக்கு இந்தச் சர்க்கார் சிபாரிசு செய்யுமா?

கனம் திரு. வெ. ராமையா: இதற்குத் தேசீய நெருக்கடி காரணமே கிடையாது. இந்த மாநிலத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய தொழில் வளர்ச்சிக்குத் தகுந்தபடி, தொழில்களின் தேவைக்குத் தகுந்த முறையில் புது இரயில்வே லைன்களுக்குப் ப்ரையாரிடி கொடுத்து, மாநில அரசாங்கம் பரிசீலனை செய்து, மத்திய அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்து கொண்டிருக்கிறது.